


ஆர்.ஆர். பிக்சர்ஸ்

# காத்தவராயன்

டைரக்ஷன்: ராமண்ணா

G.T.F21

ஆர். ஆர். பிக்சர்ஸ்

# காத்தவராயன்

## நடிகர்கள்

நடிகர் திலகம் சிவாஜி கணேசன்
T. S. பாலையா
K. A. தங்கவேலு
J. P. சந்திரபாபு
E. R. சகாதேவன்
O. A. K. தேவர்
செருகளத்தூர் சாமா
T. K. ராமராஜன்
T. V. சத்யமூர்த்தி
V. R. ஸ்ரீனிவாசன்
K. N. ராஜா
கன்னையா
கண்ணன் பாபு
சங்கரமூர்த்தி
மாஸ்டர் கிருஷ்ணன்

## நடிகைகள்

K. சாவித்திரி
P. கண்ணம்பா
E. V. சரோஜா
M. N. ராஜம்
மோஹனா
கமலம்மா
ஜெயந்தி
கமலா
ஜானகி
லக்ஷ்மி
சாரதா
பேபி ஜோதி

மற்றும் பலர்

சிவா பார்வதி தாண்டவம் :

கோபிகிருஷ்ணா & கமலா லக்ஷ்மணன்

நடன அமைப்பு :

வழூவூர் ராமையா பிள்ளை

கோழி நடனம் :

ஜோஷி & கோபால்

## சிருஷ்டி கர்த்தாக்கள் :

| | | |
|---|---|---|
| பாடல்கள் | — | தஞ்சை ராமையதாஸ் |
| சங்கீதம் | — | G. ராமனுதன் |
| ஒளிப்பதிவு | — | T. K. ராஜாபாதர் |
| பாடல் ஒலிப்பதிவு | — | A. கிருஷ்ணய்யர், T. S. ரங்கசாமி. E. I. ஜீவா, கோடீஸ்வரராவ், |
| வசனம் ஒலிப்பதிவு | — | பழனிபாபு, K. துரைசாமி |
| கலை | — | கங்கா |
| உடை ஓவியம் | — | கல்கி மணியம் |
| உடை அலங்காரம் | — | S. நடராஜ் |
| மேக்கப் | — | ஹரிபாபு, கஜபதி, நாகேஸ்வ்ராவ் மோஹன்ராவ், ரங்கசாமி, நவநீதம். |
| ஸ்டில்ஸ் | — | நாகராஜராவ் |
| எடிட்டிங் | — | M. S. மணி<br>D. துரைராஜன் |
| நடன அமைப்பு | — | T. C. தங்கராஜ் |
| புரொடக்ஷன் எக்ஸிகியூடிவ் | — | T. R. சக்ரவர்த்தி<br>K. G. விஜயரங்கம் |
| புரொடக்ஷன் மேனேஜர் | — | B. செஞ்சுராமையா |
| விளம்பர நிர்வாகம் | — | A. தட்சணாமூர்த்தி |
| விளம்பர டிசைன்கள் | — | K. நாகேஸ்வரராவ் K. நடராஜ் |
| விளம்பர பிளாக்குகள் | — | கிராபடோன் |
| ப்ராஸஸிங் | — | G. ரங்கனுதன் (விஜயா லாபரடரி) |
| மோல்டிங் | — | கோவிந்தசாமி |
| ஸ்டண்ட் மாஸ்டர் | — | சோமு |
| செட்டிங்ஸ் | — | G. குப்புசாமி, K.S.N. மூர்த்தி ராயன், மாணிக்கம். |

ஸ்டுடியோ எக்ஸிகியூடிவ் — ராமானுஜம், பாண்டுரங்கம்

சிகை அலங்காரம் — ஜோஸபின் & ரேபாராய்

ஸ்டுடியோ — வாஹினி & பாரமௌண்ட்

பின்னணி பாடகர்கள் — T. M. சௌந்தர்ராஜன்,
C. S. ஜெயராமன்,
கண்டசாலா, S.C. கிருஷ்ணன்,
P. லீலா, ஜிக்கி, சுசீலா,
A. P. கோமளா, ரத்னமாலா,
ஜமுனாராணி, ராணி, சுந்தரம்மா.

அசோசியேட் டைரக்ஷன் — I. N. மூர்த்தி

உதவியாளர்கள் :

டைரக்ஷன் — K. தங்கமுத்து,
N. திருவேங்கடம்,
A. கிருஷ்ணமூர்த்தி,
C. N. சுந்தரம்,
P. முத்துகுமாரசாமி.

ஒளிப்பதிவு — சீதாபதி, பாபுசேட், கணேசன்.
ராஜசேகர்.

ஒலிப்பதிவு — ராமச்சந்திரன், மது,
K. ஸ்ரீனிவாசன்,
T. D. கிருஷ்ணமூர்த்தி.

கலை — செல்வராஜ்

உடைகள் — V. R. முத்து,
A. M. மொஹிதீன், கன்னையா,
கரீம், நிக்கோலஸ்,

ஸ்டண்ட் — சாரங்கன் & சோமு பார்ட்டி

புரொடக்ஷன் — வெங்கடேசன், ஆறுமுகம்,
குழந்தைவேலு.

ஸ்டில்ஸ் — S. M. ஜீவா, B. கோபால்ராவ்,

திரைக்கதை வசனம் :

துறையூர் K. மூர்த்தி

டைரக்ஷன் :

T. R. ராமண்ணா

# கதைச் சுருக்கம்

அண்டாண்ட பிரம்மாண்ட அகிலங்கள் யாவையும் காத்து ரட்சிக்கும், அரனது சதியான அகிலாண்ட ஈஸ்வரியின் அகத்திலே, ஓர் சமயம் அஞ்ஞானம் புகுந்து, அரனது சாபத்திற்கு, அவ்வம்மையை அடிபணியச் செய்தது.

அடிபணிந்த தனது தாயின் நிலையறிந்த வீரபாகு அரனை எதிர்த்தான், வாதிட்டான், சிவனின் சீற்றத்துக்கு உள்ளானான். சாபத்தால் குழந்தையானான். அக்கணமே தாயும் சேயும் தரணி வந்தடைந்தனர், வினைப்பயனை அனுபவிக்க! புவியில் பார்வதி தன் செல்வன் காத்தனை வேடர்குல மங்கையரிடம் ஈந்து, தனித்திருந்து தவமியற்ற லானாள்.

இது சமயத்திலேதான், ஆரியப்பூராசனின் அரச குருவிற்கு, ஆரியமாலை என்ற ஓர் பெண் மகவு பிறந்தது அக்குழவியின் பிறப்பு, நாட்டின் சிறப்பிற்கே பங்கம் விளைவிக்குமென்றனர் சோதிடர்கள். அரசர் அதை அலட்சியப்படுத்தி குழந்தையை ஸ்வீகாரம் செய்துகொண்டு தானே வளர்த்து வந்தார்.

இங்கு ஆரியமாலா வளர்ந்தாள்.

அங்கு காத்தவராயன் வளர்ந்தான்.

காலம் விரைந்தது. காத்தன் தன் வரலாறு உணர்ந்தான். கம்பா நதிதீரம் சென்றான். தவக் கோலத்தில் தனது தாயைக் கண்டு மகிழ்ந்தான். பின்னர் அன்னையின் ஆசியுடன் உலகானுபவம் பெற வேண்டி, அகிலத்தைக் காணப் புறப்பட்டான். மலையாள நாட்டில் மந்திரவாதி சின்னானை மோடி வித்தையில் வென்று நண்பனாக அடைந்தான்.


ஒரு நாள் கானில் காத்தனும், சின்னானும் மானென்று பிடிக்க வலை வீசியிருந்தனர். அங்கு வந்தாள் வன வேடிக்கைக் காண ஆர்யமாலா, காத்தனும்—மாலாவும் ஒருவரிடம் ஒருவர் கருத்தைப் பறிகொடுத்தனர். ஆசை பிறந்து—காதல் முளைத்தது—அன்பு வளர்ந்தது. அதே சமயம் காதலர்களைப் பிரிக்க எதிர்ப்பும் ஏற்பட்டது. எதிர்ப்பை துச்சமென மதித்தான் காத்தன். காதலியைக் காண காத்தன் செய்த முயற்சிகள் பலப்பல. முடிவில் கிளியாகி கனிமொழியாளை சந்தித்தேவிட்டான். செய்தி அறிந்த அரசரும், ஆட்களும் காத்தனைப் பிடிக்க ஓடோடினர். காத்தன் தப்பித்தான்.

இவையாவையுங் கண்டு வெருண்ட கொற்றவனோ ஆரியமாலையை சேனாதிபதிக்கு மண முடிக்க நிச்சயித்துவிடுகிறார்.

மாலா இதனைக் கேள்வியுற்று மனம் நொந்தாள்.

காத்தனோ தனது தாய் தடுத்தும் கேளாது, ஆரியமாலையை சிறை எடுக்காது விலகேன் என பிரதிக்ஞை கொண்டவனாய் அங்கிருந்து விரைந்தான்.

விரைந்த காத்தன் கதி என்னவாயிற்றென்பதை வெள்ளித் திரையிலே காணுங்கள்,




## 1

**A. P. கோமளா, ஜமுனாராணி,**
**ராணி, சுந்தரம்மா, ரத்னமாலா.**


வெற்றியே அருளம்மா
வந்தாண்டருளம்மா—உனை
பக்தியுடன் போற்றும் எம்மை
காருமம்மா (வெற்றியே)
சித்தியே அருளம்மா—உன்
சேவையே அம்மா—தினம்
பக்தியுடன் போற்றினோம்—கண்
பாருமம்மா (வெற்றியே)
விண்ணாளும் ராஜா வெல்லாம்
பொன்னோடு வாழ்ந்தாலென்ன
மனமேதும் இல்லாமலே
மலராய் மலர்ந்தாலென்ன
கண்ணான செல்வம் தர
வேணுமம்மா (வெற்)
விண்ணாளும் மேகத்திலே
விளையாடும் தாரா ஒன்று
கன்னாலே ஓடிவந்து
தவழ்ந்தாலும் நாங்கள்
பொன்னான தொட்டிலிலே
பூஜிக்க வேண்டும் என்று
எண்ணி எண்ணியே மனம்
ஏங்கிமிக ஆவல் கொண்டு
கண்ணான செல்வம் தர
வேணுமம்மா (வெற்)



S. C. கிருஷ்ணன், ரத்னமாலா & குழுவினர்.

ஆண்கள் : ஹே!.. டங்கார சுப்பண்ணு
குப்பண்ணு கும்கார குப்பண்ணு
தமுக்காட்டம் போடவே வாரீரோ—அண்ணு
சந்தோஷ சேதி ஒன்று கேளீரோ (டங்)

பெண்கள்: அதிவீரசிங்கமே அழகான தங்கமே
அரசாளும் செல்வமே பாரீரோ—இந்த
ஆனந்த சேதி வந்து கேளீரோ (அதி)



பூசாபலம் பெத்த
ராசாமவன்—இவன்
ரோசாப் பூவைப்போலே
பேஷானவன்—ஆமா
பொல்லாதவன் கவலை
இல்லாதவன் (பூசா)

மாவிளக்கு போடாமெ
மலையேறி போகாமெ
மவராசி தந்தாளே
அழகானவன்—இந்த
மண்ணுளவே வந்த பொன்னுனவன்—இவன்
என்னுளுமே நமக்கு கண்ணுனவன் (மாவி)

ராஜன் : ஒளியில்லா கோவிலிலே விளக்கு போலே—எங்கள்
கலிதீர்க்கவே வந்து கிடைத்ததாலே
மலை போன்ற குறையெல்லாம் தீரவேணும்—நீ
மவராசன் போலவே வாழவேணும் (பூசா)

கோழி : கொஞ்சங்கூட நெஞ்சில் ஈரமில்லாமலே
கொல்லவே வந்தது ஞாயமா—இந்த
கொலை பாதகம் செய்ய லாகுமா (கொஞ்)

வேடன் : காலங்காலமா கொடுத்து வந்ததை
கத்தி கத்தி நீ தடுப்பதா—கோழி
கடவுளுக்காக இப்பவே வந்து
கழுத்தை நீட்டாமெ இருப்பதா (கால)

கோழி : உங்கள் மக்களும் நீங்களும் வாழ்ந்திட
எங்கள் கூட்டத்தை கொல்வதா—எம்மை
திங்கவே தெய்வமும் சொல்லுதா (உங்)

வேடன் : கொன்னு பாபம் தின்னுதீரும்
என்ன சொன்னலும் முடியாது—பெட்டை
கோழியே நீயும் கொக்கரக்கோவென
கூவியும் பொழுது விடியாது

குஞ்சுகள் :1..ப்ச்சைக் குழந்தைங்க துடிக்க துடிக்க
பலியைக் கேட்பது ஞாயமா
2..பசியை தீர்க்க ருசியைப்பார்க்க
சிசுவைப் பிரிப்பது ஆகுமா
3..தாயில்லாத குழந்தையாக
தவிக்க விடுவது தர்மமா
ஐயோ கொல்லாதே..ஐயா கொல்லாதே..
சாமி கொல்லாதே..

## 3

(தொகையரு) A. P. கோமளா

பெண் : கண்ணே என் கண்மணியே
கலிதீர்க்க வந்த குலமாமணியே
கற்பகமே கண்ணுறங்காய்

(பாட்டு)

அமுத ஊற்றிலே குமுத மலர்போல
அவதரித்தாய் பெண்ணே—எங்கள்
ஆருயிரே கண்ணே (அமுத)

(தொகையரு) கண்டசாலா

ஆண் : பால் வடியும் வதனமே திருஷ்டிபடும் கேளாயோ
பட்டாடையுடன் அங்கு ஓடாமல் வாராயோ
பாலோடு பழம் உண்டு என்செல்வமே பாராயோ

(பாட்டு)

பாலைவனத்திலே ஜீவநதிபோல
வாழ்வினில் நீ தானே—வருங்
காலத்தின் கோமானே (பாலை)



A. P. கோமளா

(தொகையரு)

பெண் : வசந்தமும் தென்றலும்
ஜதி போடவே
வண்டினம் ஆசையாய்
கவிபாடவே
வண்ணமலர் ஆனந்த
நடமாடவே


(பாட்டு)

புள்ளி மான் போல துள்ளி விளையாடும்
பூங்கொடியும் நீயே—உலகம் புகழ வந்த தாயே (புள்ளி)

கண்டசாலா

(தொகையறு)

ஆண் : வில்லேந்தும் வீரனே-வேல்
விளையாட்டின் தீரனே
பொல்லாத வாளோடு
போராடும் சூரனே
புவனமே புகழ்ந்திடும்
காத்தவராயனே



T. M. சௌந்தர்ராஜன்

(பாட்டு)

காத்தவராயன்:
ஜாதி இல்லை மத
பேதம் இல்லையே
ஏதும் கவலை இல்லையே
தாரணி மீதிலே எனக்காரும்
நிகரில்லையே!

P.லீலா (பாட்டு)

ஆரியமாலா : இல்லை இல்லை என்று
சொல்லுவார்—அந்த
இன்பங் கண்டால் வந்து துள்ளுவார்
எல்லாம் கடந்தவர் போல் விள்ளுவார்—எந்த
ஏகாங்கியும் ஒப்புக்கொள்ளுவார்

4

S. C. கிருஷ்ணன்

(மோடி)

சின்னான் : சங்கிலி கிங்கிலி ஜலிபிலி கிலிபிலி
சாமுண்டி ஜெகதண்டியே—ஆமா—எண்டே
சாலைமுனி சருக்கை முனி சப்பாணி அப்பா நீ
இப்பவே வந்திடணும்!
மாமுண்டியே வீர மலையாண்டியே-எண்டே
மந்திரங்கள் பலிச்சிடணும்—ஏ
மலையாள பகவதி மாகாளி குணவதி—எண்டே
கொடுங்கல்லூர் மாரியம்மையே!

சந்திரபாபு.

மன்னுரு : வாராண்டி வாராண்டி குட்டிச்சாத்தான்
வாசவழியாக வந்து எட்டிப்பாத்தான்
போராண்டி போராண்டி குட்டிச்சாத்தான்
பொம்பளையைக் கண்டவுடன் எட்டிப்பாத்தான்

ஆரவல்லி : முன்னாலே ஓடிவந்து குட்டிச்சாத்தான்
மொச்சை கொட்டை
கண்ணாலேஎட்டிப்பாத்தான்
தன்னாலே தேங்காயை
குட்டிச்சாத்தான்
தாக்கும்படி விட்டுவிட்டு
எட்டிப்பாத்தான்
மன் : ஏன் பாக்குரான்..?
ஆர : என்ன கேக்குரான்...?
இரு : ரத்தபலி வேணுமின்னு
சுத்தி சுத்தி நம்மைத்
தேடி (வாரா)



(மகுடி)

சின்னான் : ஓம்..க்ளீம்..க்ளாம்..ப்ளாம்..ஜேய் மலையாள பகவதி!

(தொகையறா) T. M. சௌந்தர்ராஜன்

காத்தான் : ஓம் சக்தியே எந்தன் உள்ளத்திலே—தினம்
உலாவும் பராசக்தியே
உன்னையே நம்பினேன் என்னையே ஆண்டருள்
உத்தமி மகா சக்தியே

(பாட்டு)

குண்டாந்தடி வந்து கும்மா கும்மாவென்று
கொடுத்தாலும் நடக்காதப்பா—உன்
கோடாரி சிண்டுக்கும் கூட்டாளி மண்டுக்கும்
குனிந்து கொடுக்காதப்பா—அட
குணங்கெட்ட கோமாளி கோயில் காளை போலே
கொம்பை அசைக்காதப்பா—உந்தன்
ஜம்பம் பலிக்காதப்பா

சின்னான் : ஓம்...வங்...சிங் ...வயநமசி...ஓடிவரணும் ஜக்கம் மோவ்

(தொகையறா)

காத்தான்: பேசவெ தெரியாமல் பித்தலாட்டம் செய்யும்
பூசாரி கைபொம்மையே—என்னை
பிடிக்காதடி துள்ளித் துடிக்காதடி—என்னை
அடிக்காதடி அம்மையே

(பாட்டு)

கட்டான கட்டழகா கன்னங் கருத்த
காட்டேரி பொட்டழகா—உந்தன்
குட்டெல்லாம் வெளுத்திடுச்சே—உன் மந்திரமெல்லாம்
வெட்ட வெளி யாயிடுச்சே (கட்)

சந்திரபாபு

மன்னரு : பத்தினித் தேவியே பழிகாரப் பாவியே
பழிவாங்கவா ஜக்கம்மா.. ஜக்கம்மா... ஜக்கம்மா..

ரத்னமாலா

ஆரவல்லி : சத்தியத்தாலெந்தன் தலைகாக்கும் அம்மையே
தயங்காமல்வா சொக்கம்மா... சொக்கம்மா....
சொக்கம்மா....

சின்னான் : ஸ்ரீம்.. க்ரீம்.. ப்ரீம்.... ஜெயமருள் பத்ரகாளி

T. M. சௌந்தர்ராஜன்

(தொகையரு)



காத்தான் :
அக்கினிச்சட்டி ஏந்தி
அடிக்கிறான் பச்சை ஓந்தி
அம்மையே உன் அருளால்
அடைய வேண்டும் சாந்தி

(பாட்டு)

கொம்பேரி மூக்கன் போலே
கோணத செக்கு போலே
கோடாங்கி மக்கு போலே
குந்திகிட்டு மந்தி போலே
கும்மாளம் போடாதேடா—
ஏய் அடசோணகிரி
குறுக்கு மூலே பாயாதேடா!

5

சந்திரபாபு

(மன்னாரு பாட்டு)


தந்தானேத் தந்தானே தந்தானே
—ஆண்டவன்

சரியான ஜோடி தந்தானே
தந்தானே (தந்)

செந்தாழங் காட்டுக்குள்ளே
நின்னுகிட்டு—நீ

சிரிச்சு சிரிச்சு என்னென்னமோ
பண்ணிகிட்டு

முந்தானேயே வீசிக்கிட்டு முழியாலே
பேசிக்கிட்டு—என்னே
முட்டாளுன்னு பட்டாபோட்டு
சிட்டாபறந்துபோகாதே (தந்)



பப்பாளிப்பழம் போல நீயும் இருக்குரே—என்னே
பாத்துப்பாத்து ஏனோ இப்படி மொறைக்கிரே
பட்டாடையெக் கட்டிக்கிட்டு உன் பவுசைக்காட்டி
வெட்டிக்கிட்டு—என்னே
முட்டாளுன்னு பட்டாபோட்டு சிட்டாப்பறந்து
போகாதே (தந்)
நானும் பத்தினி உனேப் பாத்தா மானம் பத்திக்குமா—நீ
தானுவந்தா ஜரிகைசேலே தாவணி பத்திக்குமா—அது
போனுப் போகட்டும் புரிஞ்சுக்கோ என் பொறுமையை நீ
தெரிஞ்சுக்கோ—என்னே
முட்டாளுன்னு பட்டாபோட்டு சிட்டாபறந்து போகாதே (தந்)



## 6

மாலா : P. லீலா

நித்திரை இல்லையடி —சகியே
நிம்மதி இல்லையடி —அந்த
உத்தமனேத் தேடி சகியே
உருகி வாடுதடி—உள்ளம்
உருகி வாடுதடி (நித்தி)
அன்பின் இதயத்திலே —சகியே
அமர்ந்த கோயிலடி
இன்ப உதயத்திலே — சகியே
இணேந்த தெய்வமடி (நித்தி)
பேசும் விழிதனிலே—சகியே
ஆசை வளர்ந்ததடி—அவன்
வீசிய வலேதனிலே—இந்தமான்
வீழ்ந்தது மாயமடி (நித்தி)
வான்நிலவும் கனலாய்—சகியே
மேனியில் வீசுதடி
வீணேயின் நாதத்திலே—சகியே
விரகம் பேசுதடி (நித்தி)

## 7

T. M. சௌந்தர்ராஜன்

காத்தான் : வா கலாபமயிலே—ஓடி நீ
வந்தே கனியமுதம்தந்தே
மகிழ்ந்திடவே (வா)
வாழ்நாளில் இனிநான்
வளம் பெறவே
வண்ண தமிழ்க் கலேயே
துள்ளி துள்ளி விளேயாட (வா)

ஆலையின் கரும்பானேன்
ஆழியின் துரும்பானேன்
காலமெல்லாம்—உந்தன்
காதலில் மெலிந்தேனே
விண்ணோடு விளையாடும்
வளர் மதியே—எந்தன்
கண்ணோடு கனிந்தாடும்
கலை நிதியே
எந்நாளும் மறவேனே
எழில் ரதியே
மின்னலிடைக் கொடியே
அன்ன நடை அழகோடு
வாராயோ—என்னைப் பாராயோ
கலி தீராயோ—எந்தன்
ஆரியமாலா.... ஆரியமாலா.... ஆரியமாலா....



தேவி அவள் கிருபை வேண்டும்—இன்றே
தெரிசனம் பெறவேண்டும்—வேறென்னவேண்டும் (தேவி)
மாளிகை மேலிருக்கும் மாடப்புறுவைக் கண்டு
மனதாரப் பேசவேண்டும்-வெறென்னவேண்டும் (தேவி)
அழகின் அரசி எந்தன் ஆரியமாலாவின்
அன்பையும் பெறவேண்டும்—வேறென்ன
வேண்டும் (தேவி)

ஜிக்கி & குழுவினர்

சொர்ணம்: தானே தந்தானனே—ஒண்ணு
தானே தந்தாலென்ன (தானே)
எட்டாக் கனிமேலே பாயாதீங்க—இங்கே
முட்டாள் தனமாக மேயாதீங்க—உங்க
பட்டாளம் வந்தாலும் சாயாதுங்க—அது
கிட்டாதுங்க வாருங்க கேளுங்க—அதுக்கு
(தானே)

தெம்மாங்கு கிம்மாங்கு பாடாதீங்க—இங்கே
தில்லானா கில்லானா போடாதீங்க—ஒங்க
கும்மாளம் கிம்மாளம் செல்லாதுங்க—அது
கூடாதுங்க வாருங்க கேளுங்க—அதுக்கு
(தானே)

சந்திரபாபு & ஜிக்கி

## 8

மன்னுரு
ஆரவல்லி } ஜிகு ஜிகு ஜிகு ஜிகு ஜிகு ஜிகு
ஜியா லகரி ஜியாலோ
சீமை எல்லாம் தேடிப்பாத்து (ஜிகு)
புடிச்சுப்புட்டேன் ஆயாலோ

மன்னரு :



நான்-கோலாலம்பூர் காட்டுக்குள்ளே
குருவி புடிக்கப் போனேன்—அங்கு
ஆலாவட்டம் போட்டுகிட்டு
அக்கா மகளும் வந்தா —இந்த
ஆளைக்கண்டதும் வெரிச்சா —அவள்
அழகைக் காட்டி முளிச்சா
அப்படி மொறச்சா
இப்படி சிரிச்சேன்
அப்புறம் நெளிச்சா
நானும் கெலிச்சேன் —அந்த
அம்மாக்கண்ணு கும்மாலாகி
ஐயாகூட வந்தாளே (ஜிகு)

ஆரவல்லி : நான்—பாசிமணி பவழமணி
ஊசி விக்கப் போனேன் —ஒரு
ராசாமவன் காசில்லாமெ
ஓசியிலே கேட்டான் —என்னை
கணக்கு பண்ணப் பார்த்தான் —நான்
கரடி போல பாஞ்சேன்
பயந்து நின்னான்
பதிலும் சொன்னேன்
நெருங்கி வந்தான்
மயங்கிப் போனேன் —அப்புறம்
கண்ணாளனும் என்னோடுதான்
காடைவிக்க வந்தானே (ஜிகு)

மன்னரு : வந்தானா....?
ஆரவல்லி: ஊம்....!



மன்னரு : காடைவிக்க வந்தவனை
கட்டாயமா சொல்லு—அவனை
காட்டாமெ போனின்னா
உடைஞ்சு போகும் பல்லு
ஆரவல்லி: ஒன்னே—
ஜாடைகாட்டி கண்ணடிச்ச
சக்களத்தி யாரு —அந்த
சண்டியை நீ காட்டலேன்னா
கொடுக்கப்போறேன் பாரு
மன்னரு : கண்ணு—
சொல்லிடறேன்
ஆரவல்லி : ஊம் சொல்லு....

மன்னுரு: அவ—காட்டுப்பூனே கண்ணு—கொஞ்சம்
கட்டையான பொண்ணு
தாட்டுப்பத்திரி சேலே —தளுக்கு
காட்டுவதே வேலே
போட்டிருப்பா வங்கி —அவ
பேருகூட சிங்கி
ஆரவல்லி: அது நான்தான்....!
மன்னுரு: உன்னேத் தூண்டிப்போட வந்த—அந்த
போண்டிப்பய யாரு....?
ஆரவல்லி: அது—ஒத்தநாடி ஆளு—ஆனு
திருதுருத்த வாலு—அது
கொக்குபோல காலு —என்னே
கொட்ட வந்த தேளு
ஊரு சுத்தி மங்கன் —அவன்
பேருகூட சிங்கன்...!
மன்னுரு: அது நான்தான்....!
மன்னுரு } அப்போ—ஊறுகாயும் சோறும்போல
ஆரவல்லி } ஜோடி சேர்ந்தோம் ஆயாலோ (ஜிகு)

## 9

சுசீலா.



மாலா: நிறை வேறுமா
—எண்ணம்
நிறைவேறுமா
கனிவான மொழி
பேசி விளையாடும்
கிளியே (நிறை)
நினைவிலும் கனவிலும்
நிலேத்திடும் சிலேயாக
மனமெனும் சோலேயில்
மலர்ந்திடும் மலராக
மகிழ்ந்து இன்றே தன்னே மறந்து இங்கே
வருவார் இன்பந் தருவார் —அன்பைப்
பெருவார் எனும் எனதாசை (நிறை)

T. M. சௌந்தர்ராஜன்

காத்தான்: எனதாசை வனிதாமணி —என்
மனதோடு உறவாடும் வனமோஹினி
இயலுடன் இசைபோல
இணேந்திடும் கலேவாணி

இகமேல் இனிமேல் சுகம்பெற
இதுபோல் திருநாள் வருமோ (எனதாசை)

மாலா : கனிவாக ஆடவரும் பேசுவார்
காத்தான் : விழி—கணையாலே மாதர்களும் வீசுவார்
மாலா : மிக—துணிவாக தூண்டிலையும் போடுவார்
காத்தான் : அதன்—சுவை கண்டால் மீறி எங்கே ஓடுவார்
மாலா : இது நிஜந்தானு....?
காத்தான் : உனைப் பிரிவேனு....?
காத்தான் / மாலா : கலை வீசிடும் நிலவாகவே ஒளியே பெருவோம் —உலகில்
மனம்போலவே—மலர் மணம் போலவே
இணையேது புவிமீது சுவைகாணும் அமுதாய்
மனம் போலவே—மலர் மணம் போலவே (நிறை)

## 10

(வளையல் பாட்டு) T. M. சௌந்தர்ராஜன்

(தொகையரு)

காத்தான் : எத்தனையோ
கைபார்த்தேன்
இதுபோல கையில்லே
எங்கயோ மாவாட்டி
காச்சிருக்கு
பொய்யில்லே!
இரும்பான கைஇது
—வளையலுக்கு
இளகாத கையிஇது—எந்த
கோடாரிக்கும் கூட
உடையாத பலகையிது



ஜிக்கி

சொர்ணம் : அட—மூனு அசல் முக்காலுன்னு—ங்கப்பா
முதுகுமேலே வச்சாலென்ன
போனு போகட்டுமின்னு —நீ
பொம்பளையே ஏய்ப்பதென்னு (அட மூனு)
நாங்க—ஓம்போது பொம்பளே —நீ
ஒண்டியான ஆம்பளே
ஒன்னுலே என்னுகும் டிங்கிரி —இங்கே
ஒய்யாரம் கிய்யாரம் காட்டாதேய்யா—ஒன்னே
உயிரோட விடவேதான்
மாட்டோமய்யா (அட மூனு)
(தொகையரு)

காத்தான் : உங்களுக்கு வரப்போ தலகாணி
வாய்க்காலோ பஞ்சு மெத்தே —நாங்க


வாச்சுகிட்டா எங்க கிட்டே
காட்டுவீங்க கொஞ்சும் வித்தே
வெறப்பாக பாத்துகிட்டே
வெறட்டுரீங்க நின்னுகிட்டே —ஓங்களே
வில்லா வளேச்சுடுவேன்
செல்லாது என்னுகிட்டே

(பாட்டு) அடி—மானு மதுரையிலே —குட்டி
மரிக்கொழுந்து வித்தவளே —வீணு
மொறைக்காதடி குட்டி
விஷயம் யாவும் கத்தவளே (அடி மானு)
ஜவ்வாது பொட்டுலே தளுக்கான கட்டுலே
சாயாதம்மா ஓங்க வெட்டுலே —என்னே
நாடோடி மச்சானு எண்ணுதீங்க —இந்த
நயினுகிட்டே ஜாடை பண்ணுதீங்க (அடி மானு)

## 11 C. S. ஜெயராமன் & குழுவினர்

(தொகையரு)

எண்ணிய எண்ணம் யாவும் நடந்தால்
இறைவனே இல்லை பாரிலே
கண்ணின் முன்னலே புண்ணிய பாவத்தின்
உண்மையைப் பார் நேரிலே



(பாட்டு)

விதியா...சதியா—இந்த
வேதனை உனக்கேனே
முறையா..சரியா.. (விதி)
மாய உலகில் நீயும் பிறந்து
வேடர் மரபில் வளர்ந்தாய்
மமதை என்ற போர்வையோடு
மதியில்லாமல் திரிந்தாய்
தாயின் உள்ளம் தகித்திடவே
தாரகமே மறந்தாய் (விதி)
வீரம் என்ற வேகத்தாலே
ஊரை அழிக்கத்துணிந்தாய்
விரகம் மீறி காதலாலே
முறையை மீறி நடந்தாய்
வீதி வீதியாக அலையும்
வேதை ஏன் அடைந்தாய் (விதி)
கைவிலங்கு கோலத்தோடு
காட்சி தருவதேனே
கானல் நீரைப் போல—உந்தன்
வாழ்வும் நேர்ந்ததேனே
காலன் போல கழுமரமே
காத்திருப்பதும் ஏனே (விதி)

PRINTED AT AB KADIR PRESS, MADRAS-4.

